# இதோ நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன். வெளி 21 : 5

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

உங்கள் யாவரையும் வாழ்த்துகிறோம். இயேசுவின் நாமத்தினால் ஏதோ ஒன்றில் புதிதாக்கப்படுவீர்களாக!

**சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்தவர், இதோ நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார்.**

சகலமும் புதிதாக்கப்படுதல் என்றால் அது ஒரு எளிதான காரியம் அல்ல. ஒரு வீட்டை புதிதாக கட்டவும் முடியும். ஒரு பழைய வீட்டை புதிதாக்கவும் முடியும். ஆனால், அதற்கு ஒரு பிரயாசம் எடுக்க வேண்டும். ஒரு முதலீடு அதற்கு தேவை. அதற்கு எத்தனையோ பாடுகள் அதில் உண்டு. நீ புதிதாக்கப்படுவதற்கு உன்னை புதிதாக மாற்ற சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் நம் ஆண்டவர் சொல்லுகிறார். சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்பதாக.

நமது வாழ்க்கையில் யாராவது ஒரு புதிய பொருளை (Pen) தந்தாலே எத்தனை சந்தோஷம். நாம் கடையில் போய் புதிய துணிமணிகளை வாங்குவதில் எவ்வளவு சந்தோஷம். பின்பு அதைப் போட்டுக்கொள்ளும்போதும் ஒரு மகிழ்ச்சி ஆட்கொள்கிறதல்லவா? சிறுவர்களை எடுத்துக்கொண்டால் புதிய வகுப்பு செல்லும்போது, புதிய ஆசிரியர், புதிய பாடங்கள் படிப்பது, புத்தகங்கள் வாங்குவது இவை அவர்களை மகிழ்ச்சிக்குள்ளாக்குகிறது அல்லவா?

அன்பான சகோதரனே, சகோதரியே சிந்தியுங்கள். இப்படி நம் வாழ்க்கையில் ஏதோ ஒரு புதியதை விலை கொடுத்து வாங்குகிறோம். பல பரிசாக கிடைக்கிறது. பல புதிய காரியங்கள் சம்பவிக்கும்போது ஒரு மகிழ்ச்சி பிறக்கிறதல்லவா? பழையவைகள் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின. நம் வாழ்விலுள்ள பழைய பாவங்கள், பிரச்சினைகள், கவலைகள், பழைய சுபாவங்கள் எல்லாம் ஒழிந்துபோய் புதிய சுபாவங்களாய் மாற்றுகிறார். அப்போது உலகம் தரக்கூடாத சந்தோஷம். அதனால்தான் அப்போஸ்தலனாகிய பவுல் ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான் என்பதாக. அருமையானவர்களே இப்பொழுது சிந்தித்து பாருங்கள்.

நீங்கள் கிறிஸ்துவுக்குள்ளிருக்கிறீர்களா? கிறிஸ்து இல்லாமல் இருக்கிறீர்களா? நீங்களே ஆராய்ந்து கிறிஸ்துவுக்காக உங்களை ஒப்புக்கொடுங்கள். உன்னை ஒரு புதிய சிருஷ்டியாக மாற்ற இயேசு தன் இரத்தத்தையே சிந்தினாரல்லவா?

"வானமும் பூமியும் மாறாமல் என்றைக்கும் நிலை நிற்பது போல" நாம் நினைக்கிறோம். ஆனால் அதையே நம் தேவன் மாற்றுகிறார் என்றால் அதிசயிக்க தக்கதல்லவா?

**வேதம் கூறுகிறது. ஏசா. 66 : 22.**

நான் படைக்கப் போகிற புதிய வானமும் புதிய பூமியும் எனக்கு முன்பாக நிற்பதுபோல உங்கள் சந்ததியும் உங்கள் நாமமும் நிற்குமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

**இயேசு சொன்ன உவமையைப் பாருங்கள்**

ஒரு மனிதனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். அவர்களில் இளைய மகன் தன் ஆஸ்தியை எல்லாம் வாங்கிக்கொண்டு சென்றுவிட்டான். ஆனால் சில நாளைக்குப் பின்பு தன் ஆஸ்தியை அழித்து பாவ வாழ்க்கையில் ஈடுபடுத்தினான். ஆனால் தன்னிடமுள்ள எல்லாப் பணமும் காலியானபின்பு அவன் நம்பியிருந்த நண்பர்கள் அவனை விட்டு ஓடினர். தேசத்தின் பஞ்சத்தினாலும் தனக்கு சாப்பிட கூட வழியில்லாமையிலும் ஒரு குடியானவனிடம் பன்றிகளை மேய்த்து வந்தான். பன்றிகள் தின்னும் தவிடுகூட அவனுக்கு கிடைக்கவில்லை. அப்போது அவன் தன் தவறை உணர்ந்தான். புத்தி தெளிந்தவனாய் இப்படியாக நினைத்தான். தன் தகப்பன் வீட்டில் வேலைக்காரர்களுக்கு பூர்த்தியாக சாப்பாடு உண்டே, நானோ பசியினால் வாடுகிறேன் என்று எண்ணி தனக்குள் புதிய தீர்மானம் பண்ணினவனாய் தன் வீட்டை நோக்கிச் சென்றான். தன் தகப்பனிடம் நான் பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு விரோதமாகவும் பாவம் செய்தேன். இனிமேல் உம்முடைய மகன் என்று சொல்லப்படுவதற்கும் பாத்திரன் அல்ல, ஒரு கூலிக்காரனாக ஏற்றுக்கொள்ளும் என்றான். அப்போது தகப்பன் தன் மகனுக்காக காத்திருந்தவனாய் அவனை ஒரு புதிய மகனாக கண்டார். அளவில்லாத மகிழ்ச்சி. உடனடியாக அவனுடைய கந்தையுடைகளையெல்லாம் கழற்றிவிட்டு புதிய வஸ்திரம், புதிய மோதிரம், புதிய பாதரட்சை, புதிதாக ஒரு விருந்து ஏற்பாடு செய்தான். புதிய சந்தோஷத்தினால் அவர்கள் இருதயம் மகிழ்ந்தது.

அருமையானவர்களே,

இந்த மகனைப் போல உன் வாழ்க்கையில் புத்தி தெளிந்துவிட்டாயா ? நான் இருக்க வேண்டிய இடம் இதுவல்ல என்று உணர்ந்துவிட்டாயா ? தன் தகப்பனிடம் தன் பாவத்தை அறிக்கையிட்டு மன்னிப்பு கேட்பது போல் நீயும் ஆண்டவராகிய இயேசுவிடம் பாவ அறிக்கை செய்துள்ளாயா ? அல்லது இன்னும் இயேசுவை விட்டு தூரமாயிருக்கிறாயா ? சிந்தித்து தீர்மானத்திற்கு வா. உனக்கும் புதிய வஸ்திரம் காத்திருக்கிறது. (இரட்சிப்பின் வஸ்திரம்) **இதோ நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்.** என்று சொன்ன இயேசுவை நோக்கிப் பார். தேவ சமூகத்தில் காத்திருந்து ஜெபி. ஏதோ ஒன்றை புதிதாக காணப்போகிறாய்.

அன்பான சகோதரனே, சகோதரியே, உன் எதிர்பார்ப்பென்ன ? உன் தொழிலைக் குறித்தா, படிப்பைக் குறித்தா, திருமணத்தைக் குறித்தா, ஆவிக்குரிய காரியங்களை குறித்தா, உன் பிரச்சினைகளைக் குறித்தா ? நிச்சயமாக எல்லாம் புதிதாக மாறும். ஏதோ ஒன்று புதிதாக நடக்கப்போகிறது என்று விசுவாசி. நீ ஒரு புதிய மனுஷனாவாய். தேவ சமூகத்தில் காத்திரு. புது பெலன் அடைந்து கழுகைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவாய். இன்றுமுதல் உன் வாழ்வில் புதிய மாறுதல், புதிய பெலன், புதிய வழி, புதிய கிருபை, புதிய ஆசீர்வாதம், புதிய சந்தோஷம் தரவே தன் இரத்தத்தை விலைக்கிரயமாக்கினார். உன் வாழ்வில் வழி தெரியாமல் திகையாதே ! கலங்காதே !

**இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்**

என்ற இயேசுவிடம் வா. ஒப்புக்கொடு, விசுவாசி எல்லாம் புதிதாகும்.

**ஏசாயா 41 : 15 கூறுகிறது**

இதோ, போரடிக்கிறதற்கு நான் உன்மைப் புதிதும் கூர்மையான பற்களுள்ள யந்தரமாக்குகிறேன்; நீ மலைகளை மிதித்து நொறுக்கி, குன்றுகளைப் பதருக்கு ஒப்பாக்கிவிடுவாய்.

உன்னை தேவன் புதிதாக்குவதின் நோக்கம் நீ மலைகளை மிதித்து நொறுக்கி, குன்றுகளை பதருக்கு ஒப்பாக்குவதற்காக.

பெரிய பர்வதமே, நீ எம்மாத்திரம்

செருபாபேலுக்கு முன்னாக நீ சமபூமியாவாய்.

அன்பு கர்த்தருடைய பிள்ளையே,

கன்மலைகளை பிளக்கும்படியாக உன்னை கரம் பிடித்தவர் கூறுகிறதாவது,

**இதோ நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்.**